

# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாகப் புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 01.04.2025 | சென்னை கிழக்கு | கொளத்தூர் | ராகவன் தெரு, பெரம்பூர் | முனைவர் இரா.தி.சபாபதி மோகன், எஸ்.மாறன் |
| 2 | 01.04.2025 | சென்னை கிழக்கு | எழும்பூர் | மூக்கு செட்டித்தெரு, ஐந்து விளக்கு, கொசப்பேட்டை | பேராசிரியர் சுப.வீரபாண்டியன், தி.கோகுல் |
| 3 | 02.04.2025 | புதுக்கோட்டை வடக்கு | விராலிமலை | சின்னக் கடைவீதி, இலுப்பூர் | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, மு.செந்தூர் பாண்டி |
| 4 | 03.04.2025 | புதுக்கோட்டை வடக்கு | புதுக்கோட்டை | கடை வீதி, பெருங்களூர், புதுக்கோட்டை | எழுத்தாளர் வே.மதிமாறன், பேனா தெய்வம் |
| 5 | 04.04.2025 | சென்னை கிழக்கு | அம்பத்தூர் | யாதவாள் தெரு, பாடி, அம்பத்தூர் | இந்திரகுமார் தேரடி, அ.தஸ்னீம் பானு |
| 6 | 04.04.2025 | சென்னை கிழக்கு | திரு.வி.க நகர் | சந்திரயோகி சமாதி சாலை, மங்களபுரம் | மாண்புமிகு கோவி.செழியன், செ.ஜோதி காமாட்சிராஜன் |
| 7 | 04.04.2025 | தஞ்சாவூர் வடக்கு | திருவிடைமருதூர் | கதிராமங்கலம் கடைவீதி, திருவிடைமருதூர் | பேராசிரியர் சுப.வீரபாண்டியன், ரா.கருணாநிதி |
| 8 | 04.04.2025 | அணைக்கட்டு | வேலூர் | பேருந்து நிலையம், ஒடுகத்தூர் | திண்டுக்கல் ஐ.லியோனி, எம்.முகமது ஜபீர் |
| 9 | 05.04.2025 | தஞ்சாவூர் வடக்கு | கும்பகோணம் | சோழபுரம் கடைவீதி, கும்பகோணம் | நாஞ்சில் சம்பத், மு.காவியா |
| 10 | 05.04.2025 | கிருஷ்ணகிரி மேற்கு | வேப்பனஹள்ளி | சூளகிரி | சூர்யா கிருஷ்ணமூர்த்தி, சி.பவித்ரா |
| 11 | 06.04.2025 | கிருஷ்ணகிரி கிழக்கு | பர்கூர் | பேருந்து நிலையம், பர்கூர் | நாஞ்சில் சம்பத், கு.முரளிகிருஷ்ணன் |

அன்பகம், சென்னை – 18.
நாள் : 31–03–2025.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி

## சேலம் கிழக்கு மாவட்டம் –

## வீரபாண்டி தொகுதிக்குட்பட்ட பாகமுகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிவிப்பு!

சேலம், ஏப். 1-

சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

சேலம் கிழக்கு மாவட்ட கழகத்திற்குட்பட்ட 091 - வீரபாண்டி சட்டமன்ற தொகுதிக்கான பாகமுகவர்கள் (BLA 2) மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) ஆலோசனைக்கூட்டம் சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர்



ஆகிய எனது தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட தொகுதி பார்வையாளர், ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள், தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் பாகமுகவர்கள் (BLA2), மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) மட்டும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

091 - வீரபாண்டி சட்டமன்றத் தொகுதி

தேதி மற்றும் நேரம் - நகர, ஒன்றிய, பேரூர் - இடம் விவரம்:

02-04-2025 & காலை 10.00 - சேலம் தெற்கு ஒன்றியம் மற்றும் பனமரத்துப்பட்டி ஒன்றியம் - பாலமுருகன் திருமண மண்டபம், அமாணி கொண்டலாம்பட்டி

02-04-2025 & மதியம் 2.00 - வீரபாண்டி ஒன்றியம் - ஆதித்யா மஹால், அரியானூர்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் நிதி ரூ.4,034 கோடியை வழங்காத ஒன்றிய அரசைக் கண்டித்து ஈரோடு தெற்கு மாவட்டம், மொடக்குறிச்சி மேற்கு, மொடக்குறிச்சி கிழக்கு, சென்னிமலை வடக்கு, ஈரோடு மத்திய மாவட்டம் பவானி ஆகிய ஒன்றியங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஈரோடு மத்திய மாவட்டப் பொறுப்பாளர் தோப்பு என்.டி.வெங்கடாசலம், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், கழக நெசவாளரணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், ஒன்றியச் செயலாளர்கள் சு.குணசேகரன், பி.செங்கோட்டையன், வ.கதிர்வேல், கே.பி.துரைராஜ், காயத்ரி இளங்கோ, என்.டி.பத்மநாபன், டாக்டர் விவேக், ஆர்.பொன்னுசாமி, சரவணன், சாமியப்பன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## தமிழ்நாட்டில் காலூன்ற முடியாத விரக்தியால் பா.ஜ.க. அரசு

## ஏழை எளிய மக்களின் சம்பளத்தை நிறுத்துகிறது!

### பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. கண்டனம்!

திருவாரூர், ஏப். 1–

முதலமைச்சர் – திராவிட நாயகர் – தளபதி அவர்களின் இமாலய சாதனை திட்டங்களால் தமிழ்நாட்டில் காலூன்ற முடியாது என்கிற விரக்தியில் பா.ஜ.க. அரசு ஏழை எளிய மக்களின் நூறுநாள் வேலைக்கான சம்பளத்தைக்கூட நிறுத்துகிறது என சட்டமன்ற உறுப்பினர் பூண்டி. கே.கலைவாணன் பத்திரிக்கையாளர்களிடம் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் அளித்த பேட்டி வருமாறு,

“மண்ணின் மைந்தர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வகுத்த கழக ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்றான மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்கிற கோட்பாட்டை சிரமேற்கொண்டு தமிழ் நாட்டில் ஆட்சி நடத்தும் முதலமைச்சர் தளபதி அவர்கள், இந்திய துணைப்பெரும் கண்டத்திற்கு தமிழ்நாட்டின் மூலம் எவ்வளவு வருவாயை பெருக்க முடியுமோ அவ்வளையும் செய்து இந்தியாவிற்கே பெருமை சேர்த்து வருகிறார்.

வேற்றுமையில் ஒற்றுமைதான் இந்தியாவின் சிறப்பம்சம், மொழிகள் பலவாகினும் சிந்தனை ஒன்றுடைய இந்தியாவின் ஒற்றுமையை சிதைக்கும் வகையில் மத, இன, மொழி வாரியாக பிரிவினை திட்டங்களை ஒன்றிய பா.ஜ.க.அரசு மேற்கொண்டு வருகிறது.

அதனை தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்கள் எதிர்த்து வருகிறார். பல்வேறு மொழிகளை அழித்த ஒன்றிய பாசிச சக்திகளின் சதியை அறிந்திருக்கும் தளபதி அவர்கள், தமிழ் இனத்தையும் மொழியையும் காக்கும் பணியை உயிரென மேற்கொண்டு செய்து வருகிறார்.

இதனை கண்டு அஞ்சும் பாசிச பா.ஜ.க. அரசு தமிழ் நாட்டில் தங்களுக்கு ஏற்படும் எதிர்ப்பை முறியடிக்க, மக்கள் தொகையின் அடிப்படையில் தொகுதி சீரமைப்பு எனும் இத்துப்போய் துருப்பிடித்த பழைய ஆயுதத்தை கைகளில் எடுத்திருக்கிறது.1971ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி பார்த்தால் தமிழ்நாடு



ஒன்றிய அரசு அறிவித்த மக்கள்தொகை கட்டுப்பாடு திட்டத்தை மிக சரியாக கடைப்பிடித்ததன் காரணமாக, மக்கள் தொகை வளர்ச்சி 12சதவீதமாக குறைந்த நிலையில், வட மாநிலங்களில் சதவீதமாக மக்கள் தொகை திட்டமிட்டே 24 சதவீதமாக பெருகியது.

1971 முதல் ஒன்றிய அரசின் திட்டங்களை தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்கள் செயல்படுத்தியதற்கு தண்டனையாக தொகுதி சீரமைப்பை கொண்டுவந்து பாசிச பா.ஜ.க. அரசு வஞ்சிக்க நினைக்கிறது. தென்மநிலங்களின் வருவாய் ஈட்டும் திறன் 36 சதவீதமாக உள்ள நிலையில் வடமாநிலங்களின் வருவாய் ஈட்டும் திறன் சரிபாதியாக குறைந்துள்ளது. பாசிச பா.ஜ.க. எந்த சூழ்நிலையிலும் தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களில் காலூன்ற முடியாது என்பதால் இந்த தொகுதி சீரமைப்பை கையில் எடுத்துள்ளது.

மார்ச் மாதம் முதல்வர் தளபதி அவர்கள் தலைமை செயலகத்தில் கூட்டத்தை ஏற்பாடு செய்து, ஏழு மாநில முதல்வர்களை அழைத்து கூட்டு நடவடிக்கை குழு அமைப்பது என எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் மார்ச் 22 கூட்டத்தை நடத்தி ஒன்றிய அரசின் மக்கள்தொகை அடிப்படையிலான தொகுதி சீரமைப்பிற்கு கடும் கண்டனத்தை தெரிவித்திருந்த நிலையில், ஏழு மாநிலங்களை ஒன்றிணைத்து ஒரு குழுவை ஏற்படுத்துதல் என்பதும், ஒன்றிய அரசை எதிர்ப்பதும் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை இன்றைக்கு பா.ஜ.க அறிந்து இருக்கிறது. இதனை தமிழ்நாட்டின் அனைத்து பத்திரிக்கை மற்றும் ஊடக நண்பர்கள் அனைத்து மக்களுக்கும் கொண்டு சென்று சேர்க்கவேண்டும்.

மக்கள் தொகையின் அடிப்படையில் தொகுதி பங்கீடு என வந்தால் நம் தமிழ் நாட்டில் 8 தொகுதிகள் குறைந்து 31 தொகுதியாக வாய்ப்புள்ளது. இதுகுறித்து உள்துறை அமைச்சரிடமோ பிரதமரிடமோ கேட்டால் தொகுதிகள் குறையாது என்கிற மழுப்பலான பதிலையே தருகிறார்கள். அதே நேரத்தில் மக்கள்தொகை குறைந்தால் தென் மாநிலங்களுக்கு தொகுதிகள் குறையும் என்பதைப்போல், மக்கள் தொகையை பெருக்கி வைத்துள்ள வட மாநிலங்களில் தொகுதிகள் பன்மடங்கு உயர்ந்து, அதனால் நமது தமிழ்நாட்டின் உரிமைகளுக்கு குரல்கொடுக்க முடியாமல் உரிமைகள் மறுக்கப்படும்.

தென் மாநிலங்களின் உதவியே இல்லாமல் ஒன்றிய அரசை அமைக்க பா.ஜ.க. அரசு முயற்சி செய்கிறது என்பதை நம்மால் தெளிவாக புரிந்து கொள்ள முடிகிறது. இதனால் மணிப்பூரில் இதே போல மக்கள் பிரதிநிதித்துவம் குறைவாக இருப்பதால் ஏற்பட்ட பிரச்னை, எந்த அளவுக்கு அரங்கேறியது என்பதும், அங்கு ஏற்பட்ட பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு கவலைப்படவில்லை என்பதுமே சாட்சி. இதேநிலை தான் தென் மாநிலங்களுக்கும் மக்கள் பிரதிநிதித்து வம் குறைந்தால் ஏற்படும், விவசாயப்பிரச்சனை ஏற்பட்டால் கூட வட மாநிலங்களின் மிருக பலத்தை கொண்டு ஆட்சியை தக்க வைத்துக்கொண்டு எந்த மசோதாவையும் எளிதில் நிறைவேற்றி விடுவார்கள்.

இந்த நிலையை மாற்றி தென்மாநிலங்களின் குரல் மீண்டும் நாடாளுமன்றத்தில் ஒலிக்க முதல்வர் – திராவிட நாயகர் தளபதி அவர்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் தென்மாநிலங்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

அதே போல தமிழ்நாட்டின் அனைத்து பொது அமைப்புகளும் இந்த பிரச்சினைகளை ஒவ்வொரு குடிமகனுக்கும் கொண்டு செல்லவேண்டும்.

பாசிச சக்திகளை எதிர்க்க கூட்டு நடவடிக்கை குழுவுக்கு ஏழு மாநிலங்களிலிருந்து 63 பிரதிகள் அழைக்கப்பட்டிருந்த நிலையில் முதலமைச்சர்கள் உள்ளிட்ட 58பேர் பங்கேற்றிருந்தனர். இந்த அளவுக்கு தமிழ்நாட்டின் முதல்வர் மேல் வட மாநிலங்கள் எந்த அளவுக்கு நம்பிக்கை வைத்துள்ளது என்பதை இது காட்டுகிறது. இந்தித் திணிப்பை எதிர்ப்பதால், தமிழ்நாடு மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான் மட்டுமே கல்விக்குரிய தொகையை விடுவிப்போம் என மிரட்டும் ஒன்றிய அரசுக்கு, தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா என்பதைப்போல் “இரண்டாயிரம் கோடி இல்லை பத்தாயிரம் கோடிகள் கூடுதலாக கொடுத்தாலும் நாங்கள் மும்மொழி கொள்கையை ஏற்க மாட்டோம்” என நெஞ்சை நிமிர்த்தி சொல்லி தமிழ் மொழியை காப்போம் என தளபதின் அவர்கள் சொல்லி இருக்கிறார்.

தமிழ்நாட்டை வஞ்சிக்க வேண்டும் என்பதற்காக கொஞ்சமும் ஈவு இரக்கமற்ற இந்த பாசிச பா.ஜ.க. அரசு ஏழை எளிய மக்களின் நூறு நாள் வேலைக்கான சம்பளத்திற்கு கொடுக்கவேண்டிய நிதியை நிறுத்தி வைத்துள்ளது. ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு ஐநூறு ரூபாய் மட்டுமே வருமானம் தரும் அந்த பணத்தையும் நிறுத்தி, வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் பாமர மக்களை வஞ்சிக்கிற பாசிச பா.ஜ.க. அரசு, பல ஆயிரம் கோடிகளை கார்ப்பரேட்டே நிறுவனங்க ளுக்கு அள்ளி கொடுக்கிறது. இந்திய துணைப்பெரும் கண்டத்திற்கே ஒரு சாபக்கேடாக விளங்குகிறது இந்த பாசிச பா.ஜ.க. ஆட்சி. இதற்கு முன்னாலிருந்த ஒன்றிய அரசுகள் மிகுந்த சிரமங்களுக்கிடையே கொண்டுவந்த பொதுத்துறை நிருவனங்களை, இந்த பாசிச பா.ஜ.க. அரசு ஒவ்வொன்றாக அழித்துக்கொண்டிருக்கிறது.

ஒன்றிய பா.ஜ.க.வின் இந்த பாசிச கொளகைகளை எந்த நாளும் தட்டிகேட்கும் தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்களின் வழியில் நின்று எதிர்ப்போம். தமிழ்நாடு போராடும். தமிழ்நாடு வெல்லும்.

இவ்வாறு பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தமது பேட்டியில் கூறியுள்ளார்.